DINAMALAR

PAGE NO: 02 DATE: 22-08-2023

# மானுடவியல் பேராசிரியருக்கு துணைவேந்தர் பாராட்டு



மானுடவியல் துறையில் சாதித்தற்காக பாராட்டு சான்றிதழ் வாங்கிய புதுச்சேரி பல்கலை பேராசிரியர் அஜீத் ஜெய்ஸ்வாலை துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

**புதுச்சேரி, ஆக. 22–**

மானுடவியல் துறையில் சாதித்தற்காக பாராட்டு சான்றிதழ் பெற்ற புதுச்சேரி பல்கலை பேராசிரியர் அஜீத் ஜெய்ஸ்வாலை துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

ஐக்கிய இந்திய மானுடவியல் மன்றம் மற்றும் கலிங்கா இன்ஸ்டிடியூட் ஆப் சோஷியல் சயின்ஸ் சார்பில் ஒடிசா மாநிலம் புவனேஷ்வரில் அண்மையில் விழா நடந்தது.

அதில், புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறைத் தலைவர் அஜீத் ஜெய்ஸ்வாலுக்கு மானுடவியல் துறையில் அவரது சிறந்த பங்களிப்பு மற்றும் ஆராய்ச்சி, மனித புரிதலின் எல்லைகளை முன்னேற்றுவதற்கான அவரது அர்ப்பணிப்பினை பாராட்டி சான்றிதழ் வழங்கப்பட்டது.

பாராட்டு சான்றிதழ் பெற்ற பேராசிரியர் அஜீத் ஜெய்ஸ்வாலை, துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

DINAKARAN

DATE: 22.08.2023

PAGE NO: 16

ஒடிசா மாநிலத்தில்

# பல்கலை., பேராசிரியருக்கு மானுடவியல் சான்றிதழ்

புதுச்சேரி, ஆக. 22: ஒடிசா மாநிலம் புவனேஷ்வரில் ஐக்கிய இந்திய மானுடவியல் மன்றம் மற்றும் கலிங்கா இன்ஸ்டிடியூட் ஆஃப் சோஷியல் சயின்ஸ் சார்பில் புதுவை பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் அஜீத் ஜெய்ஸ்வாலுக்கு மானுடவியல் துறையில் சிறந்து விளங்கியதற்காக அவரை பாராட்டும் வகையில் அங்கீகாரம் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கி கவுரவிக்கப்பட்டது. அவரது சிறந்த பங்களிப்பையும் மற்றும் ஆராய்ச்சி, மனித புரிதலின் எல்லைகளை முன்னேற்றுவதற்கான அவரது அர்ப்பணிப்பு, ஆர்வம், சமூகப் பிரச்னைகளை தனது ஆராய்ச்சியின் மூலம் நிவர்த்தி செய்தல் உள்ளிட்டவைகள் குறித்து பாராட்டப்பட்டது. மேலும், டாக்டர் ஜெய்ஸ்வாலின் மானுடவியல் துறையில் ஆழமான தாக்கம் குறித்து உலகெங்கிலும் உள்ள மானுடவியலாளர்கள், ஆராய்ச்சியாளர்களிடம் கொண்டு செல்லப்பட்டது. இந்நிலையில் டாக்டர் அஜீத் ஜெய்ஸ்வால் பெற்ற சான்றிதழை புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங்கிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்.



மானுடவியல் சான்றிதழ் பெற்ற புதுவை பல்கலைக்கழக பேராசிரியர் அஜீத் ஜெய்ஸ்வால், துணைவேந்தர் குர்மீத்சிங்கிடம் வாழ்த்து பெற்றார்.

MAALAI MALAR

DATE: 22.08.2023

PAGE NO: 03

# புதுவை பல்கலை பேராசிரியருக்கு மானுடவியல் சான்றிதழ்

புதுச்சேரி, ஆக.22—

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் ஐக்கிய இந்திய மானுடவியல் மன்றம் மற்றும் கலிங்கா இன்ஸ்டியூட் ஆப் சோசியல் சயின்ஸ் சார்பில் விருது வழங்கும் விழா நடந்தது.

இதில் புதுவை பல்கலைக் கழகத்தின் மானுடவியல் துறை தலைவர் அஜீத் ஜெய்ஸ்வாலுக்கு மானுடவியல் துறையில் சிறந்து விளங்கியதற்காக பாராட்டு சான்றிதழ் வழங்கி கவுரவிக்கப்பட்டார்.

ஜெய்ஸ்வாலின் மானுடவியல் துறையில் ஆழமான தாக்கம் குறித்து உலகெங்கும் உள்ள மானுடவியலாளர்கள், ஆராய்ச்சி யாளர்கள் கற்றறிந்து வருகின்றனர். பாராட்டு சான்றிதழ் பெற்ற பேராசிரியரை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் வாழ்த்தி பாராட்டினார்.